18.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகளின் பிரச்னைகளை பதிவு செய்ய உதவி எண் அறிவிப்பு

கிராமப்புற விவசாயிகளின் பிரச்னைகள், துயரங்களைப் பதிவு செய்யும் வகையில் "ஸ்வராஜ் அபியான்' அமைப்பு 011-66977663 என்ற உதவி எண்ணை (ஹெல்ப் லைன்) அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அனுபம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பிரதமர் நரேந்திர மோடி தனது "மனதின் குரல்' நிகழ்ச்சியில் பேசுகையில், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், துயரங்கள் குறித்து குறிப்பிடுவதில்லை.

விவசாயிகளுக்கு எதிரான பிம்பத்தை மாற்றும் வகையில், "கிராம் உதய் சே பாரத் உதய் அபியான்' என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இதன் மூலம் ஏப்ரல் 14 தொடங்கி 24 வரை ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தின் கருத்துகளை அறிய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக ஏப்ரல் 14 முதல் 16 வரை டாக்டர் அம்பேத்கருக்கு அஞ்சலி செலுத்தவும், ஏப்ரல் 17 முதல் 20 வரை ஏதாவதொரு நாளில் கிராமங்களிலுள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கொள்கைகளை அறிமுகப்படுத்தவும், விவசாயத்தை மேம்படுத்த தேவையான ஆலோசனைகளைப் பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 முதல் 24 வரை கிராம சபைக் கூட்டங்களை நடத்தி கிராமத்தில் தூய்மையான குடிநீர், சுகாதாரம், பெண்கள், பின்தங்கிய

பிரிவினர் ஆகியன குறித்து விவாதிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதுபோன்ற அறிவிப்புகள் வெறும் கண்துடைப்பாகவே உள்ளன.

இதைக் கருத்தில் கொண்டு கிராமப்புற ஏழை விவசாயிகளின் பிரச்னைகளையும், துயரங்களையும் பதிவு செய்யும் வகையில், 011-66977663 என்ற உதவி எண்ணை அறிவித்துள்ளோம். இதன் மூலம் பெறப்படும் விவசாயிகளின் புகார்கள், பிரச்னைகளைத் தீர்க்கும் வகையில் அவர்களது "மனதில் கஷ்டங்களை' (மன் கீ பீடா) பதிவு செய்து, ஆட்சியில் உள்ளவர்களை தொடர்பு கொள்ளும் இணைப்புப் பாலமாக ஸ்வராஜ் அபியான் (ஜெய் கிசான் இயக்கம்) செயல்படும்.

ஸ்வராஜ் அபியான் அமைப்பின் தன்னார்வலர்கள் தங்களது மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வட்டத்திலும் சுமார் 10 கிராம பஞ்சாயத்துகளைத் தொடர்புக் கொண்டு மத்திய அரசு அறிவித்துள்ள கூட்டங்கள் நடைபெற்றனவா என்பதை அறிவார்கள். மொத்தத் தகவல்களும் தொகுக்கப்பட்டு ஏப்ரல் 24-ஆம் தேதி பொதுத் தளத்தில் வெளியிடப்படும் என்று கூறினார்.

## வரத்து குறைவுவெண்டைக்காய், பீன்ஸ், அவரை விலை அதிகரிப்பு



கோயம்பேடு சந்தையில் வரத்து குறைவு காரணமாக வெண்டைக்காய், பீன்ஸ், அவரை உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

சென்னை கோயம்பேடு சந்தையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஏப்ரல் முதல் வாரம் வரை பெரிய வெங்காயம், தக்காளி, பீன்ஸ் உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகளின் விலை குறைவாக இருந்தது.

இந்த நிலையில், கர்நாடக மாநிலம், தமிழகத்தில் திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் பீன்ஸ், அவரை ஆகியவற்றின் விளைச்சல் குறைந்ததால் கோயம்பேடு சந்தைக்கு அவை குறைந்தளவிலேயே கொண்டுவரப்பட்டன.

இதனால் கடந்த வாரம் ரூ.25-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பீன்ஸ் தற்போது ரூ.40 முதல் ரூ.50 வரையிலும், ரூ.30-க்கு விற்கப்பட்ட அவரை ரூ.50-க்கும் விற்கப்படுகிறது.

இதேபோல் சிறிய வெங்காயம், முருங்கைக்காய் உள்ளிட்ட காய்கறிகள் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை விலை அதிகரித்துள்ளது.

கோயம்பேடு சந்தைக்கு கடந்த மூன்று நாள்களில் 650 லாரிகளில் மொத்தம் 10,000 டன் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன.

## நுங்கு விற்பனை அமோகம்

காஞ்சிபுரத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், பனை நுங்கு, இளநீர் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரத்தில் கடந்த ஒரு வார காலமாக வெயிலின் தாக்கம் கடுமையாக உள்ளது. இதனைச் சமாளிக்க மக்கள் குளுமையான உணவுப் பொருள்களை வாங்கி உண்ணுகின்றனர். குளிர்பானக் கடைகளில் கூட்டம் அலைமோதுகிறது, சாலையோரங்களில் விற்கப்படும் தர்பூசணி, வெள்ளரிப் பழங்கள், கூழ் ஆகியவற்றை வாங்கிச் சாப்பிடுகிறார்கள்.

இந் நிலையில் தற்போது பனை நுங்குகள் அதிகமாக விற்பனைக்கு வந்துள்ளது. 4 நுங்குகள் ரூ. 10-க்கு பல்வேறு இடங்களில் விற்கப்படுகின்றன.

அதேபோல் இளநீர் ரூ. 15, ரூ. 20, ரூ. 25 விலைகளில் விற்கப்படுகின்றன. கோடை வெயிலைத் தணிக்க பொதுமக்கள் இதுபோன்ற இயற்கையான, உடலுக்குக் குளிர்ச்சி தரும் பொருள்களை அதிகம் வாங்குகின்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 37.41 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 37.41 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 222 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 900 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 2.06 டி.எம்.சி.

**ரூ.80 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 80 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 3,157 மூட்டைகளில் 1,52,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 52.75-க்கும், அதிகபட்சமாக ரூ. 52.25-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 36.10-க்கும், அதிகபட்சமாக ரூ. 52.40-க்கும் விற்பனையானது.

மொத்தம், ரூ. 80 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.3.05 கோடிக்கு மஞ்சள் விற்பனை

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 5ஆயிரம் குவிண்டால் மஞ்சள் ரூ.3.05 கோடிக்கு விற்பனையானது.

திருச்செங்கோடு - பரமத்தி வேலூர் சாலையில் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஒரு குவிண்டால் விராலி ரூ.8,801 முதல் ரூ.10,999 வரையும், கிழங்கு ரூ.8,414 முதல் ரூ.9,299 வரையும், பனங்காலி ரூ.9,066 முதல் ரூ.19,999 வரையும் ஏலம் போனது. மொத்தம் விற்பனைக்கு வந்த

5 ஆயிரம் குவிண்டால் மஞ்சள் ரூ.3.05 கோடிக்கு விற்பனையானதாக மேலாண் இயக்குநர் ஹேமா தெரிவித்தார்.

## கறவை மாடுகளுக்கான தீவன மேலாண்மைப் பயிற்சி

கறவை மாடுகளுக்கான கோடைகால தீவன மேலாண்மைப் பயிற்சி நாகை கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஏப். 22-ஆம் தேதி நடைபெறும் என பயிற்சி மையத் தலைவர் பி. சீனிவாசன் தெரிவித்தார்.

நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், கறவை மாடுகளுக்கான கோடைகால தீவன மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி ஏப். 22-ஆம் தேதி காலை 10 மணிக்குத் தொடங்கி நடைபெறவுள்ளது. கறவை மாடுகளுக்கு கோடைகாலங்களில் ஏற்படும் பாதிப்புகள், தீவனத்தேவை, தீவன உற்பத்தி, ஊறுகாய் தீவனம் தயாரித்தல் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் பயிற்சி

மையத்தை நேரில் அணுகலாம் அல்லது 04365- 247123 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## திற்பரப்பு அருவியில் குறைந்தளவே நீர்வரத்து

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கோடை மழை பெய்து வரும் நிலையில், திற்பரப்பு அருவியில் தண்ணீர் சற்று அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், மக்கள் நீர்நிலைச் சார்ந்த சுற்றுலாத் தலங்களை நோக்கி செல்கின்றனர். அதே நேரம் நீர்நிலைச் சார்ந்த சுற்றுலாத் தலங்களும் வறண்ட நிலையிலேயே உள்ளன.

கடந்த சில நாள்களாக தண்ணீரின்றி வறண்ட நிலையில் காணப்பட்ட திற்பரப்பு அருவியில், ஞாயிற்றுக்கிழமை மழை காரணமாக சிறிதளவு தண்ணீர் கொட்டியது. இந்நிலையில் இங்கு வந்த சுற்றுலாப் பயணிகள் உற்சாகமாக குளித்தனர்.

சீரமைப்புப் பணிகள்: தற்போது அருவியில் தண்ணீர் குறைந்து காணப்படுவதால் அருவியில் சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

## நெல்லை காய்கறி சந்தைகளில் பாகற்காய் விற்பனை அதிகரிப்பு

திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் உள்ள காய்கறி சந்தைகளில் பாகற்காய் விற்பனை அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தின் தோட்டப் பயிர்களில் கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பல்லாரிக்கு அடுத்ததாக பாகற்காய் விளைவிக்கப்படுகிறது. சிறிய ரக பாகற்காய்களுக்கு பொதுமக்களிடையே அதிக வரவேற்பு உள்ளது. ஊறுகாய், பொரியல், வறுவல், தொக்கு, குழம்பு, கூட்டு என்று தென்னிந்திய உணவு வகைகளில் பலவிதமாக பாகற்காயை சமைக்க முடியும். நீரிழிவு நோய், சிறுநீரக நோய்கள், கல்லீரல், நுரையீரல் சம்பந்தப்பட்ட

நோயாளிகளுக்கு பாகற்காய் சாப்பிட்டால் நல்லது என மருத்துவர்கள் அறிவுறுத்துவதால் அவற்றின் விற்பனை மிகவும் அதிகரித்துள்ளது.

பாகற்காய், சின்ன வெங்காயம் ஆகியவற்றின் விலையும் கடந்த ஒரு வாரமாக அதிகரித்துள்ளது. கிலோ ரூ.15-க்கு விற்பனையான பாகற்காய் ரூ.20-க்கும், ரூ.25-க்கு விற்பனையான சின்னவெங்காயம் ரூ.30-க்கும் இந்த வாரத்தில் விற்பனையாகிறது.

கோடை மாங்காய் வரத் தொடங்கியுள்ளதால் அதன் விலை கிலோ ரூ.65இல் இருந்து ரூ.40 ஆக குறைந்துள்ளது.

திருநெல்வேலியில் காய்கனிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோவுக்கு): கத்தரி-ரூ.12, வெண்டைக்காய்-ரூ.14, தக்காளி-ரூ.15, அவரைக்காய்-ரூ.48, கொத்தவரை-ரூ.20, புடலங்காய்-ரூ.14, பாகற்காய்-ரூ.20, பீர்க்கங்காய்-ரூ.18, சுரைக்காய்-ரூ.12, தடியங்காய்-ரூ.12, பூசணிக்காய்-ரூ.18, மாங்காய்-ரூ.40, மிளகாய்-ரூ.30, முள்ளங்கி-ரூ.12, சேனைக்கிழங்கு-ரூ.24, கருணைக்கிழங்கு-ரூ.26, சேம்பு-ரூ.24, சிறுகிழங்கு-ரூ.36, மரவள்ளிகிழங்கு-ரூ.16, சீனிக்கிழங்கு-ரூ.16, இஞ்சி-ரூ.36, உருளைக்கிழங்கு-ரூ.28, கேரட்-ரூ.32, பீட்ரூட்-ரூ.20, முட்டைகோஸ்-ரூ.12, சவ்சவ்-ரூ.16, ரிங்பீன்ஸ்-ரூ.28, காலிபிளவர்-ரூ.40, பூண்டு-ரூ.120, பல்லாரி- ரூ.16, சின்ன வெங்காயம்-ரூ.30.

## விவசாய நிலப்பரப்பு குறைவதால் உற்பத்தி பாதிப்பு அபாயம் ஏற்பட்டுள்ளது: எம்.எஸ்.சுவாமிநாதன்

நாடு முழுவதும் விவசாய நிலப்பரப்பு குறைந்து வருவதால் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம், யுனெஸ்கோ மதன்ஜித் சிங் தெற்காசிய பிராந்திய கல்வித் துறை சார்பில், பட்டினி இல்லாத நிலையை ஏற்படுத்துவோம் என்ற தலைப்பிலான விரிவுரை நிகழ்ச்சி சனிக்கிழமை பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. தெற்காசிய கல்வித் துறைத் தலைவர் ஏ.சுப்பிரமணியன் வரவேற்றுப் பேசுகையில், மையத்தின் செயல்பாடுகள் மற்றும் யுனெஸ்கோ தூதுவராக மதன்ஜித்

சிங் ஆற்றிய பணிகளை விவரித்தார். வரலாற்றுத் துறைத் தலைவர் வெங்கடரகோத்தம் தலைமை வகித்தார்.

வேளாண் விஞ்ஞானி எம்எஸ்.சுவாமிநாதன் பங்கேற்று பேசியதாவது: பட்டினியால் வாடுவோருக்கு கடவுள் உணவாகத் தெரிகிறார். வேளாண் துறையில் பல்வேறு ஏற்ற, இறக்கங்கள் நேரிட்டுள்ளன.

நாடு முழுவதும் வேளாண் நிலப்பரப்பு சுருங்கி வருவதால், உற்பத்திக்கு கடும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. புரதச்சத்து, ஊட்டச்சத்து நிறைந்த உணவு அனைவருக்கும் கிடைக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்பின்றி எப்போதும் பசுமைப் புரட்சி என்ற நிலையை எட்ட வேண்டும். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார். உதவிப் பேராசிரியர் ஐ.ஹுமாயூன் நன்றி கூறினார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நெருப்பை அணைக்கும் நெருப்பு

வெயில் காலத்தில் தீப்பிடிக்கும் பிரச்னைகள் அதிகமாகின்றன. நெருப்பை அணைக்க நீர், மலை, கார்பன்டை ஆக்சைடைப் பயன்படுத்துவர். நெருப்பை அணைக்க நீரைப் பயன்படுத்துவதை விட வெடி மருந்து கலந்த நீர் விரைவில் நெருப்பை அணைக்க உதவும். இது முரண்பாடாகத் தோன்றினாலும் வெடி மருந்தைப் பயன்படுத்தினால் வெடிமருந்து விரைவில் எரிந்து எரிய முடியாத வாயுவை ஏராளமாக உண்டாக்கும். இந்த வாயு எரியும் பொருளைச் சூழ்ந்து கொண்டு எரிவதைத் தடுத்து நிறுத்துகிறது. இது தவிர காட்டுத்தீ அல்லது புல்வெளியில் ஏற்படும் தீயை அணைப்பதற்கு புல்வெளியின் மறுகோடியில் தீவைப்பர். இரண்டு தீச்சுவர்களும் ஒன்றையொன்று சந்தித்து விழுங்கி அணைந்து போகின்றன.

## கோடையில் குளிர்காற்று

கோடையில் இந்தியா முழுவதும் அனல்காற்று வீசினாலும் தமிழக கேரள எல்லைப்பகுதியில் உள்ள ராமக்கல்மெட்டு என்ற இடத்தில் குளிர் காற்று வீசுகிறது. இந்தியா மட்டுமின்றி ஆசியாக் கண்டத்திலேயே அதிக காற்று வீசும் பகுதியாக ராமக்கல் மெட்டு உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3,500 அடி உயரத்தில் ராமக்கல் மெட்டு உள்ளது. இங்கு 40 அடி உயரத்தில் ஆதிவாசி கணவன், மனைவி, குழந்தை சிலை உள்ளது. ராமக்கல்மெட்டில் மணிக்கு 35 கி.மீ., வேகத்தில் காற்று வீசுகிறது. ராமக்கல்மெட்டைச் சுற்றி அதிகமான காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இவை மற்ற காற்றாலைகளை விட அதிக அளவில் மின்னாற்றலை உற்பத்தி செய்கின்றன.

## கோடையின் தாக்கத்தால் அணைகளில் தண்ணீர் குறைவு

மஞ்சூர்: 'அணைகளில் துார்வாரும் பணி குறித்து மேலதிகாரிகள் தான், நடவடிக்கை எடுக்க வேண் டும்' என, தெரிவிக்கப்பட்டது.

நீலகிரியில் உள்ள, 12 மின் நிலையங்கள் நாள்தோறும், 833.65 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ளும் திறன் கொண்டவை. இங்குள்ள தண்ணீரின் அளவை பொருத்து, ஆண்டு முழுவதும் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

மழையின்றி பாதிப்பு

கடந்தாண்டு நவம்பர் மாதம் துவக்கத்திலிருந்து ஏற்பட்ட பனிபொழிவு, பிப்ரவரி மாதம் வரையில் தொடர்ந்தது. நடப்பாண்டில் இதுவரை போதிய மழை பெய்யவில்லை. அணைகளில் இருப்பில் இருந்த தண்ணீர் படிப்படியாக மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருவதால், தற்போது, பெரும்பாலான அணைகளில் தண்ணீர் குறைந்து வருகிறது. இதில், மிகவும் தண்ணீர் குறைந்து காணப்படும் அணைகளில், சேறும், சகதியும் அதிகரித்துள்ளது.

துார்வார ஆய்வு பணி

இங்குள்ள சில அணைகளை துார்வாரும் நோக்கில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு, குந்தா, கெத்தை அணைகள் அளவிடும் பணியை

மின்வாரியம் மேற்கொண்டது. இந்த அணைகளில் தண்ணீர் குறையும் போது, சேற்றை துார வார நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அப்போது தெரிவிக்கப்பட்டது. தற்போது, கோடையின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், இதற்கான பணிகள் ஏதும் துவக்கப்படவில்லை.

தடையின்றி மின் உற்பத்தி

இந்நிலையில், குந்தா மின்வாரியம் சார்பில், 12 மின் நிலையங்களில் மொத்தமுள்ள, 32 யூனிட்கள் தடையின்றி இயக்கப்பட்டு வருகிறது.

குந்தா மின்வாரிய செயற்பொறியாளர் ரகு கூறுகையில்,“மின் தேவையை அதிகரிக்கும் வகையில், மின் நிலையங்களில் உள்ள அனைத்து யூனிட்களும், தடையின்றி இயக்கப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுகிறது. கோடை காலம் நிலவும் நிலையில், சில அணைகளை துார்வாரும் நடவடிக்கையில், மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. துார்வாருவது குறித்து, உயர் அதிகாரிகள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டு,” என்றார்.

## தேயிலை துாளுக்கு கிராக்கி குறைவு

ஊட்டி:நீலகிரி தேயிலை துாளுக்கான 'கிராக்கி' குறைந்ததால், ஏல விலையில் 'அடி' விழத் துவங்கியுள்ளது; இதனால், பசுந்தேயிலைக்கான விலை சரிகிறது.

நீலகிரி மாவட்டத்தில், பல்வேறு தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலை துாள், வாரந்தோறும், குன்னுார் ஏல மையத்தில் விற்கப்படுகிறது. சராசரி ஏல விலையின் அடிப்படையில் தான், சிறு, குறு விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்நிலையில், கடந்த சில வாரங்களாக, பசுந்தேயிலை விலையில் ஏற்றத் தாழ்வு நிலவுகிறது.உற்பத்தி குறைவுநீலகிரியில், மழை பொய்த்ததால், தேயிலை தோட்டங்களில் வறட்சி தென்பட்டது. தேயிலை செடிகள், சிவப்பு சிலந்தி தாக்குதலுக்கு உள்ளானதால், பல இடங்களில் மகசூல் குறைந்தது. சிவப்பு சிலந்தி, மிக வேகமாக, அடுத்தடுத்த தோட்டங்களில் பரவும் தன்மை கொண்டதால், மகசூலில் பலத்த அடி

விழுந்தது. இதனால், ஏலத்துக்கு வரும் தேயிலை துாளின் வரத்தும் குறைந்து வருகிறது. கடந்த வாரம், வெறும், 9.56 லட்சம் கிலோ தேயிலை துாள் மட்டுமே ஏலத்துக்கு வந்தது. இது, கடந்த ஆறு வாரங்களை விட குறைவு என, கூறப்படுகிறது.

வர்த்தகத்தில் தொய்வுபொதுவாக, தேயிலை ஏலத் தில், வட நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். ஆனால், சமீப வாரங்களாக, வட நாட்டு வர்த்தகர்கள், ஏலத்தில் ஆர்வம் காட்டாமல் உள்ளனர். இதனால், ஏலத்தில், 'கிராக்கி' இருப்பதில்லை; அதனால், விலையும் உயரவில்லை. இதனால், பெருமளவு தேயிலை துாள் விற்பனையாகாமல் தேங்கும் நிலை ஏற்பட்டது. தேயிலை துாள் தேக்கமடைவதை தவிர்க்க, வர்த்தகர்கள் கேட்கும் விலைக்கு, உற்பத்தியாளர்கள் தேயிலை துாளை விற்கின்றனர்.விலையில் 'சதம்' அடிக்கணும்சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறியதாவது: தேயிலை ஏலத்தில் வர்த்தர்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது; கிராக்கி குறைந்ததால், கடந்த வாரம், ஒரு கிலோ தேயிலை துாளின் சராசரி விலை, 91 ரூபாயாக இருந்தது. கடந்த, பிப்ரவரியில், ஒரு கிலோ உயர் ரக தேயிலை துாள் கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில், சமீப வாரங்களாக, விலை சரிவு தென்படுகிறது.கடந்த பிப்வரி மாதம் வரை, ஏலத்தில் விற்கப்பட்ட ஒரு கிலோ தேயிலை துாளின் சராசரி விலை, கிலோவுக்கு, 100 ரூபாய்க்கு மேல் இருந்தது; இதனால், பசுந்தேயிலைக்கு ஓரளவு விலையை வழங்க முடிந்தது. சமீப வாரங்களாக, சராசரி விலை குறைந்து வருவதால், தேயிலைக்கு உரிய விலை கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே, தேயிலை துாளுக்கான, உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையை தக்க வைப்பது அவசியம்," என்றார்.

## மாயனூர் தடுப்பணையில் ஜிலேபி மீன்கள் விற்பனை

கிருஷ்ணராயபுரம்: மாயனூர் தடுப்பணையில், தற்போது ஜிலேபி மீன்கள் அதிகளவில் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் சட்டபை தொகுதிக்கு உட்பட்ட மாயனூர் தடுப்பணையில் வஞ்சிரம் விலாங்கு, ஜிலேபி மற்றும் அயிரை, கெண்டை மீன்கள் அதிளவில் கிடைப்பது வாடிக்கை.

இதுகுறித்து அப்பகுதி மீனவர்கள் கூறியதாவது: மாயனூர் தடுப்பணை மற்றும் காவிரி ஆற்றில் தற்போது ஜிலேபி மீன்கள் மட்டுமே அதிகளவில் கிடைக்கிறது. கிலோ, ரூ.60 முதல், ரூ.100க்கு உயிருள்ள மீன்களை விற்று வருகிறோம். இங்கு, வஞ்சிரம் விலாங்கு, ஜிலேபி மற்றும் அயிரை, கெண்டை மீன்கள் அதிளவில் கிடைத்தது. தற்போது, ஜிலேபி மட்டுமே அதிகம் கிடைக்கிறது. ஒவ்வொரு மீனும் குறைந்த பட்சம், 250 கிராம் எடையுள்ளவையாக உள்ளன. உயிருள்ள மீன்கள் இங்கு கிடைப்பதால், மாயனூர் மட்டுமின்றி, சுற்றுப்புற கிராமப்பகுதி மக்களும், செல்லாண்டியம்மன் கோவிலுக்கு வருபவர்களும், சுற்றுலா வருபவர்களும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தற்போது, ஜிலேபி மீன்கள் மட்டும் அதிகளவில் கிடைக்கிறது. இதை வைத்து நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் பயன்பெற்று வருகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கிணற்று பாசனங்களின் மூலம் விவசாயிகள் தென்னை வளர்ப்பு

கிருஷ்ணராயபுரம்: கரூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில், மாயனூர் செல்லும் வழியில் கிணற்று பாசனம் மூலம் தென்னை மரங்கள் செழித்து வளர்ந்துள்ளன.

கரூர் மாவட்டத்தில், கோடையால், எட்டு யூனியன்களிலும் விவசாயம் பொய்த்துப்போய் விட்டதால் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இருப்பினும் காவிரி மற்றும் அமராவதி, தென்கரைவாய்க்கால், ராஜவாய்க்கால் மூலம் பெறப்படும் தண்ணீர் மற்றும் கிணற்றுப்பாசனம்

மூலம் விவசாயம் செய்து வருகின்றனர். கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மாயனூர் செல்லும் வழியில் கிணற்று பாசனம் மூலம் தென்னை மரங்கள் வளர்ப்பதுடன் ஊடு பயிராக கால்நடைகளுக்கு தேவையான பயிர்கள் செய்து வருகின்றனர். இதன் மூலம், தென்னை மரங்களும், ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் பயன்பெற்று வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் பயன்பெற்று வருகின்றனர். கோடை மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் காத்திருக்கின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோடை வெயில் அதிகரித்துள்ளதால் தி.மலை வெயில் நேரத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டி செல்லாதீர்கள் விவசாயிகளுக்கு கலெக்டர் வேண்டுகோள்

திருவண்ணாமலை: கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கால்நடைகளை வெயில் நேரக்கில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச்செல்வதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும் என கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: தற்போது கோடை காலம் தொடங்கி விட்டதால் வெயிலின் தாக்கம் 100 டிகிரியை தாண்டி நேற்று திருவண்ணாமலையில் 104 டிகிரியை தொட்டுள்ளது. இதனால் கால்நடைகளை வளர்த்து வரும் விவசாயிகள் மற்றும் மாட்டு பண்ணை, கோழி பண்ணையாளர்கள், கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து கால்நடைகளை காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

கோழி பண்ணை வைத்திருப்பவர்கள் கோழிகளுக்கு தீவனத்தில் புரத சத்தினை அதிகமாக கொடுப்பதை தவிர்த்து, அமினோ அமிலம், அதிக எண்ணெய்ச்சத்து மிகுந்த தீவனத்தை கோழிகளுக்கு உணவளித்து வெயிலின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும். மேலும்

கோழிப்பண்ணையை சுற்றி கொட்டகையின் இருபுறமும் குளிர்ந்த தண்ணீரில் சாக்கு பைகளை நனைத்து கட்டி தொங்கவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் வெயில் தாக்கத்தில் இருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.

வெயில் நேரத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை சூரிய வெப்பம் அதிகம் உள்ள இடங்களுக்கு மேய்ச்சலுக்காக கால்நடைகளை, விவசாயிகள் ஓட்டிச்செல்வதை தவிர்க்க வேண்டும். காற்றோட்டமான கீற்று கொட்டகையிலும், நிழல் நிறைந்த பகுதிகளிலும் கால்நடைகளை கட்ட வேண்டும். அதிகம் மூச்சு வாங்கும் கால்நடைகளுக்கு வெயிலின் தாக்கத்தினால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக வெப்ப அயற்சியை தடுக்கும் மருந்துகள் கொடுக்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள கால்நடைகளை குளம், குட்டை, ஏரிப்பகுதியில் உள்ள நீரில் வெயில் நேரத்தில் குளிப்பாட்டி வெப்ப தாக்குதலை குறைக்கலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## வாட்டி வதைக்கும் வெயில் பழச்சாறு, இளநீர் அருந்துவதால் உடல் வெப்பத்தை தணிக்கலாம்

சிதம்பரம், : தமிழகத்தில் கத்திரி வெயில் துவங்குவதற்கு முன்னரே வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்க துவங்கிவிட்டது. கடந்த ஒரு மாத காலமாகவே வெயில் சூடு தாங்க முடியாமல் மக்கள் அவதியுற்று வருகின்றனர். தற்போது கத்திரி வெயில் தாக்கத்தை விட வெப்பம் அதிகமாக உள்ளது, இது இம்மாதம் இறுதி வரை நீடிக்கும் என கூறப்படுகிறது. கடந்த இரு தினங்களாக சிதம்பரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வெப்பத்தின் தாக்குதல் அதிகமாக காணப்பட்டது. அனல் காற்று வீசியதால் பெரும்பாலான மக்கள் குடையுடன் காணப்பட்டனர்.

வாகனங்களில் செல்பவர்கள் குல்லா அணிந்து சென்றனர். சிதம்பரம் அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் அர்ச்சுனன் கூறுகையில், கடும் வெயிலை சமாளிக்க தாகம் எடுக்கும் போதெல்லாம் தண்ணீர் அருந்த வேண்டும். பாட்டில் குளிர்பானங்களை தவிர்த்து பழச்சாறுகள், நீர்மோர்

ஆகியவை அருந்தலாம். உணவில் காரம், புளிப்பு, மசாலா பொருட்களை தவிர்த்து நீர்ச்சத்துள்ள காய்கறிகளையும் கீரை வகைகளையும் சேர்த்து கொள்ள வேண்டும். இயற்கை பானமான இளநீர் அருந்தலாம். வெள்ளரிக்காய், பனைநுங்கு, தர்பூசணி பழம் ஆகியவை உடலுக்கு குளிர்ச்சி தரும். காலை,மாலை இரு வேளையும் குளித்து உடலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

**பூட்டிக்கிடக்கும் மண்டிகள் சுட்டெரிக்கும் வெயிலால் மாம்பழ சீசன் மந்தம்**

தர்மபுரி : பருவநிலை மாற்றத்தால் சுட்டெரிக்கும் வெயிலால், நடப்பாண்டு மாம்பழ சீசன் துவங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தில் அதிகளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டரிலும், தர்மபுரி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஹெக்டரிலும் மா சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் கோடை காலம் துவங்கும் முன் மா சீசன் துவங்குவது வழக்கம். ஆனால், நடப்பாண்டு இன்னும் சந்தைக்கு மாம்பழங்கள் விற்பனைக்கு வரவில்லை. தோப்புகளில் மாங்காய் அறுவடை முழுமையாக துவங்காததால், தர்மபுரி, கிருஷ்ணகிரியில் உள்ள மாங்காய் மண்டிகள் இன்னும் திறக்கப்படவில்லை.

இது குறித்து மா மொத்த வியாபாரிகள் கூறுகையில், '' ஆண்டுதோறும் மாம்பழம் சீசன் மார்ச் முதல் வாரத்தில் துவங்கி, ஜூன் மாத இறுதி வரை இருக்கும். நடப்பாண்டு கோடை மழை பெய்வில்லை. இதனால், மாவட்டத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. இதுவரை இல்லாத அளவிற்கு, தர்மபுரி மாவட்டத்தில் 106 டிகிரி வரை வெயில் அடிக்கிறது. மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் தற்போது, பெங்களூரா போன்ற ரக மாங்காய் அறுவடை தொடங்கியுள்ளது. வெயில் தொடர்ந்தால், வெப்பத்தில் மாங்காய்கள் மரத்திலேயே வெம்பிவிடும். கடந்த ஆண்டும், இதே போல், சீசன் தாமதமாகவே துவங்கியது. பருவம் நிலை

மாற்றத்தால் முன்னுக்கு பின் மாறுவதால், மா சீசன் தள்ளி போகிறது'' என்றனர்.

## விளைச்சல் அதிகரிப்பால் சப்போட்டா விற்பனை ஜோர்

அரூர் : தர்மபுரியில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் சப்போட்டா விற்பனை ஜோராராக நடந்து வருகிறது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக பரப்பளவில் சப்போட்டா பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, சப்போட்டா அறுவடை சீசன் துவங்கிவிட்டதால், அதிக அளவில் விற்பனைக்கு வரத்துவங்கி உள்ளது. சப்போட்டாவில் புரதம், நார்சத்து, மாவு சத்து, கால்சியம், பாஸ்பரஸ், விட்டமின் 'சி' உள்ளிட்ட ஏராளமான சத்துக்கள் உள்ளது.

ரத்த ஓட்டத்தை சீராக்கி, கொழுப்பை கரைப்பதுடன், இதயம் சம்மந்தமான கோளாறுகளுக்கு தீர்வாக சப்போட்டா உள்ளது. இந்த ஆண்டு விளைச்சலும் நன்றாக உள்ளது. கோடை காலம் துவங்கி விட்டதால், மக்கள் பழரசத்திற்கும், பழமாக சாப்பிடவும் விரும்பி வாங்கி செல்கின்றனர். அரூரில் சந்தையிலுள்ள பழக்கடைகளிலும், சாலையோரம் தள்ளுவண்டிகளில் வைத்தும் சப்போட்டா விற்பனை செய்கின்றனர். சப்போட்டா ஒரு கிலோ ரூ.20 முதல், ரூ.25 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## மழையின்மை எதிரொலி பச்சை தேயிலை வரத்து குறைவு

மஞ்சூர்,: குந்தா பகுதியில் மழை பொழிவு அறவே இல்லாத நிலையில் பச்சை தேயிலை வரத்து பல மடங்கு குறைந்துள்ளதால் தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது. நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில் தேயிலை விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இதை முன்னிட்டு மஞ்சூர், கைகாட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, பிக்கட்டி, இத்தலார், மகாலிங்கா, மேற்குநாடு உள்ளிட்ட 8 கூட்டுறவு ஆலைகளும் ஏராளமான தனியார் தொழிற்சாலைகளும் இயங்கி வருகிறது. சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்கள் தங்களது தேயிலை தோட்டங்களில் இருந்து பறிக்கும் பச்சை தேயிலையை மேற்படி தொழிற்சாலைகளுக்கு விநியோகித்து வருகிறார்கள். இந்நிலையில் குந்தா பகுதியில் கடந்த நவம்பர் முதல் மார்ச் மாதம் வரை நிலவிய பனிபொழிவை தொடர்ந்து கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து படி,படியாக குறைந்து வந்தது. இதை தொடர்ந்து பனியின் தாக்கம் அடியோடு குறைந்து தற்ோபாது கடும் வெயில் நிலவுகிறது.

கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக மழை பொழிவு அறவே இல்லாததால் வறட்சியின் தாக்கம் அதிகரித்து பச்சை தேயிலை வரத்து பல மடங்கு குறைந்துள்ளது. சீசன் அல்லாத காலங்களில் தினசரி 15 ஆயிரம் முதல் 18 ஆயிரம் கிலோ வரை தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து இருக்கும். ஆனால் தற்போது வறட்சியால் நாளொன்றுக்கு வெறும் 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் கிலோ வரை மட்டுமே பசுந்தேயிலை வரத்து உள்ளது. இதனால் தினசரி 3 ஷிப்டுகள் இயங்கி வந்த பெரும்பாலான தொழிற்சாலைகளிலும் தற்போது 1 ஷிப்டு மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. தேயிலைதூள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் தற்காலிக தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புகளும் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாறை, வஞ்சிரம், கொடுவா மீன்கள் அதிகளவில் கிடைத்தன

காரைக்கால் : ஆழ்கடலில் பெரும்பாலும் பெரிய வகை பாறை, வஞ்சிரம், காக்கா, கொடுவா உள்ளிட்ட மீன் வகைகளைதான் மீனவர்கள் விரும்பி பிடிப்பார்கள். ஒரு சில மீனவர்கள் வலையில், சிறிய வகை வரி பாறை, காறை மற்றும் பெரிய வகை திருக்கை மீன்கள் கூட்டம் கூட்டமாக அதிகம் கிடைக்கும். ஆனால், கடந்த சில மாதங்களாக, காரைக்கால் மீன்பிடி துறைமுகத்தில் தொடர்ந்து மத்தி மீன்கள், செம்பரா மீன்கள் மட்டுமே கிடைத்து வந்தது.

மீன்பிடி தடை காலம் கடந்த 15ம் தேதி தொடங்கியதை அடுத்து, கடலுக்கு சென்ற மீனவர்கள் ஒருவர் பின் ஒருவராக கரை திரும்பிய வண்ணம் இருந்தனர். கடைசி நாளாக நேற்று முன்தினம் மற்றும் நேற்று அனைத்து மீனவர்களும் கரை திரும்பினர். கடைசி நாள் என்பதால்

என்னவோ மீனவர்கள் ஆழ்கடலில் தங்கி அதிக அளவில் மீன்களை பிடித்து வந்தனர். கரை திரும்பிய மீனவர்கள் வலையில், அதிக அளவில், பாறை, கேரை, சூரை, கொடுவா, கருங்கொடுவா, வஞ்சிரம், மயில் மீன்கள் மற்றும் இறால் வகைகள் அதிகம் இருந்தது.

இதில், பாறை மீன்கள் கிலோ ரூ.250 முதல் ரூ.300 வரை ஏலம் போனது. கேரை, சூரை, மயில் மீன்கள் கிலோ ரூ.130 முதல், ரூ.150 வரை ஏலம் போனது. வஞ்சிரம், கொடுவா மீன்கள் கிலோ ரூ.400 முதல் ரூ.450 வரை ஏலம் போனது. கடசி நாள் என்பதால் ஏராளமான ஏலதாரர்கள் துறைமுகத்தில் குவிந்திருந்தனர்.

## பருத்தி செடிகளில் வேரழுகலை தடுக்கலாம் ஆராய்ச்சி பேராசிரியர் தகவல்

மதுரை, : பருத்தி செடிகளில் வேரழுகல் நோயை சில எளிய நடைமுறைகளை கையாண்டு தடுக்கலாம் என ஆராய்ச்சி மைய பேராசிரியர் தெரிவித்துள்ளார்.பருத்தி செடிகளில் வேரழுகல் நோய் ஏற்படுவதால் செடி பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, இளம் செடிகளிலும், வளர்ந்த செடிகளிலும் வேரழுகல் நோயானது முதலில் தோன்றுகிறது. நோய் பாதிக்கப்பட்ட செடிகள் காய்ந்து விடுகிறது. இலைகள் மஞ்சள் நிறமடைந்து பழுத்து உதிர்ந்து விடுகிறது. நோய் தீவிரமடையும் போது செடிகளில் ஆணி வேரைத் தவிர மற்ற வேர்கள் அனைத்தும் அழுகி விடுகிறது. நோயினால் பாதிக்கப்பட்ட செடியை மெதுவாக இழுத்தாலும் எளிதாக கையோடு வந்துவிடும்.

தண்டுக்கூன் வண்டின் தாக்குதலாலும் இந்நோயின் பாதிப்பு அதிகரிக்கும். எனவே, இதனை தடுக்க வேரழுகல் நோய் அறிகுறி தென்பட்ட உடனே ஒரு லிட்டர் நீரில், 1 கிராம் கார்பன்டசிம் மருந்தை கலந்து கொள்ளவேண்டும். அதை நோய் தாக்கிய செடிகளிலும், அதைச்சுற்றியுள்ள செடிகளிலும் அதன் வேர்ப்பகுதி நனையுமாறு மருந்தை ஊற்ற வேண்டும்.

அதே நேரத்தில் வயலில் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவற்றை முறையாக செய்தால், பருத்தியில் வேரழுகல் நோய் பரவாமல் தடுக்கலாம் என பருத்தி ஆராய்ச்சி மைய பேராசிரியர் குணசேகரன் தெரிவித்துள்ளார்.

**மீன்விலை கடும் உயர்வு**

ராமநாதபுரம், : தமிழகம் முழுவதும் விசைபடகுகளில் மீன்பிடிக்க மே 29 வரை மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் மாவட்டத்தில் மீன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் மீன்கள் இனப்பெருக்கம் செய்ய ஏதுவாக கடல் பகுதிகளில் விசைபடகுகளின் சென்றுமீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் இந்த தடை நடைமுறைக்கு வந்தது. மே மாதம் 29ம் தேதி வரை இந்த தடை அமலில் உள்ளது. இதையடுத்து மண்டபம், ராமேஸ்வரம் பகுதிகளில் நாட்டுப்படகு மீனவர்கள் மட்டும் கடலுக்குள் சென்று மீன் பிடித்து வருகின்றனர். இதனால் ராமநாதபுரம், பரமக்குடி மீன் மார்கெட்டிற்கு மீன்வரத்து குறைவாக உள்ளது. பற்றாக்குறை உள்ளதால் மீன் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

சூடை மீன் கிலோ ரூ.50 லிருந்து ரூ.80 வரையிலும், நகரை மீன் கிலோ ரூ.100லிருந்து ரூ.150 வரையிலும், ஊழா மீன் கிலோ ரூ.200 லிருந்து ரூ.300 வரையிலும், விலை மீன் கிலோ ரூ.200 லிருந்து ரூ.300 வரையிலும், நண்டு கிலோ ரூ.200லிருந்து ரூ.300 வரையிலும். சீலா கிலோ ரூ. 300 லிருந்து ரூ.450 வரையிலும். அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது.

போதிய அளவு மார்க்கெட்டிற்கு கடல்மீன் வராததால் கண்மாயில் பிடிக்கப்படும் கெழுத்தி, கெண்டை, வளர்ப்பு கட்லா மீன்களை வாங்கி மீன் வியாபாரிகள் விற்கின்றனர்.

அதனால் இவற்றின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. விலை உயர்வு, மீன் வரத்து குறைவு ஆகிய காரணங்களால் அசைவ பிரியர்கள் ஆடு, கோழி இறைச்சியை விரும்பி வாங்கி உண்ண தொடங்கியுள்ளனர்.

மே 29க்கு பின்னரே மீன்கள் விலை கணிசமாக குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### சுட்டெரிக்கும் வெயில்: பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு அன்னாசி, வெள்ளரி பழங்கள் வரத்து அதிகரிப்பு



பொள்ளாச்சி,

கோடை வெயில் சுட்டெரிப்பால் பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பழங்கள் வரத்து அதிகரித்து உள்ளது.

<u>வெயிலின் தாக்கம்</u>

கடந்த மார்ச் மாதம் முதல் கடும் வெயில் அடித்து வருகிறது. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் தான் வெயில் தாக்கம் அதிகமாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக வெயில் சுட்டெரித்து

வருகிறது. இதனால் பகல் நேரங்களில் பெரும்பாலோனார் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை.

வெயில் வாட்டி வதைப்பதால் பழங்கள், பழச்சாறு மற்றும் குளிர்பானங்கள் விற்பனை சூடுபிடித்து உள்ளது. இதனால் பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பழங்கள் வரத்து அதிகரித்து உள்ளது.

<u>அன்னாசி பழம்</u>

அண்டை மாநிலமான கேரளாவில் இருந்து மலப்புரம், கொழிஞ்சாம்பாறை, சாலக்குடி, கோரடி, பாட்டியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அன்னாசி பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில் இருந்து, வியாபாரிகள் மொத்த விலைக்கு பழங்களை வாங்கி செல்கின்றனர்.

அன்னாசி பழம் கிலோ ரூ.35 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்படுகிறது. வழக்கமாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் அன்னாசி பழம் அதிகமாக இருக்கும். தற்போது கோடை வெயில் சுட்டெரிப்பதால் பழம் வரத்து அதிகமாக இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>பழங்களின் விலை</u>

இதேபோன்று கேரளாவில் இருந்து பெரிய வெள்ளரி பழங்கள் விற்பனைக்கு பொள்ளாச்சிக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது. இது கிலோ ரூ.25 முதல் ரூ.35–க்கு விற்பனை ஆனது. பொள்ளாச்சியில் நேற்று விற்பனையான பழங்களின் விலை(கிலோ) விவரம் வருமாறு:–

ஆப்பிள் ரூ.150, மாம்பழம் ரூ.80, ஆரஞ்சு ரூ.80, சாத்துக்குடி ரூ.60, பேரீச்சம்பழம் ரூ.120, பன்னீர் திராட்சை ரூ.60, பச்சை திராட்சை ரூ.90, கருப்பு திராட்சை ரூ.110, அன்னாசி பழம் ரூ.25, வெள்ளரி ரூ.25, மாதுளை ரூ.110, பலாப்பழம் ரூ.40, முலாம்பழம் ரூ.25–க்கு விற்பனை ஆனது.

**கடலூர் பனைபொருள் பயிற்சி நிலையத்தில் பனைவெல்லம் தயாரிக்கும் பணி தொடங்கியது**



கடலூர்,

கடலூர் பீச்ரோட்டில் உள்ள பனைபொருள் பயிற்சி நிலையத்தில் பனை வெல்லம் தயாரிக்கும் பணி தொடங்கியது.

<u>பதனீர் சீசன்</u>

கடலூர் பீச்ரோட்டில் மண்டல பனைபொருள் பயிற்சி நிலையம் உள்ளது. இங்கு 100–க்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளன. ஆண்டுதோறும் ஜனவரி முதல் ஜூன் மாதம் முடிய 6 மாத காலம் பதனீர் உற்பத்தி செய்யப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பதனீர் உற்பத்தி கடந்த ஜனவரி மாதம் தொடங்கியது. தினமும் 200 லிட்டர் அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. பின்னர் இவற்றை பதப்படுத்தி பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 200 மில்லி அளவு கொண்ட ஒரு பாக்கெட் பதனீர் ரூ.12–க்கு விற்பனை செய்யப்படுகிறது. உடல் குளிர்ச்சியை தரும் என்பதால் கோடை வெயிலின் தாகம் தணிக்க பொதுமக்கள் பதனீரை ஆர்வத்துடன் பருகி வருகிறார்கள்.

<u>பனைவெல்லம்</u>

பதனீர் அதிக அளவில் உற்பத்தியாகும் போது குடிப்பதற்கு போக மீதமுள்ள பதனீரை காய்ச்சி பனைவெல்லம், கற்கண்டு போன்றவை தயாரிப்பது வழக்கம். அந்த வகையில் தற்போது பதனீர் உற்பத்தி செய்வதோடு, பதனீரை காய்ச்சி பனை வெல்லம் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

இது குறித்து பனைபொருள் பயிற்சி நிலைய பதனீர் பிரிவு அதிகாரி கணபதி கூறும்போது பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனைக்கு போக மீதமுள்ள பதனீரை காய்ச்சி பனைவெல்லம் தயார் செய்வோம். பதனீரை காய்ச்சி வெல்லம் தயாரிப்பதற்கு ஒரு நாள் ஆகிவிடும். நல்ல பக்குவம் வந்த பின்னர் பனை வெல்லம் தயார் செய்யப்படும். இங்கு விற்பனை செய்யப்படும் பனை வெல்லம் கலப்படும் இல்லாதது, சுத்தமானது, தரமானது. ஒரு கிலோ பனைவெல்லம் ரூ.200–க்கு விற்பனை செய்யப்பட இருப்பதாக கூறினார்.

## கடும் வெயிலால் இளநீர் விற்பனை அமோகம்



சிதம்பரம்,

சிதம்பரம் பகுதியில் கடும் வெயில் காரணமாக இளநீர் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் அவதி

தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக கடும் வெயில் அடித்து வருகின்றது. இதனால் பொது மக்கள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். மேலும் சாலையில் அனல் காற்று வீசுவதால், இரு சக்கர வாகன ஓட்டிகள் முகத்தில் துணியை கட்டிக்கொண்டு செல்வதையும் பாதசாரிகள் கையில் குடை பிடித்தப்படி செல்வதையும் காணமுடிகிறது. வெயிலின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள பொதுமக்கள் பலரும் தற்போது நீர்ச்சத்து நிறைந்த இளநீர், தர்பூசணி, நுங்கு, கரும்புச்சாறு உள்ளிட்டவைகளை அதிக அளவில் வாங்கி சாப்பிட்டு வருகின்றனர்.

மருத்துவ குணம் கொண்டது

இதனை கருத்தில் கொண்டு சிதம்பரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம புறங்களில் உள்ள சாலையோரங்களில் வியாபாரிகள் அதிக அளவில் இளநீரை குவித்து வைத்து விற்பனை செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு சாலையோரங்களில் விற்பனை செய்யப்படும் இளநீரை இருசக்கரம், நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் மற்றும் பாதசாரிகள் வாங்கி பருகி செல்கின்றனர். இது குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதையடுத்து உடல் உஷ்ணத்தை குறைக்க பொது மக்கள் அனைவரும் தற்போது, நீர்ச்சத்து நிறைந்ததும், மருத்துவ குணம் கொண்டதுமான இளநீரை அதிக அளவில் விரும்பி வாங்கி பருகி வருகின்றனர். இதன் காரணமாக இளநீர் விற்பனை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஒரு இளநீர் ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனையாகி வருகிறது என்றார்.

## கொளுத்தும் கோடைவெயிலால் ஏற்படும் நீர்ச்சத்து குறைபாட்டை தவிர்க்க உப்பு–சர்க்கரை கரைசல்



திண்டுக்கல்

கொளுத்தும் கோடைவெயிலால் ஏற்படும் நீர்ச்சத்து குறைபாட்டை தவிர்க்க திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு உப்பு–சர்க்கரை கரைசல் வினியோகம் செய்யப்படுகிறது.

<u>கொளுத்தும் வெயில்</u>

கோடைகாலம் என்றால் வெயில் மக்களை வாட்டி வதைத்து விடும். அதிலும் இந்த ஆண்டு கோடைகாலம் தொடங்கியதில் இருந்தே கடுமையான வெயில் கொளுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் வேலூர், திருச்சி, திண்டுக்கல் உள்பட சில ஊர்களில் 100 டிகிரிக்கு மேல் தொடர்ச்சியாக கோடை வெயில் கொளுத்துவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக வெப்ப அலைகள் வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று வானிலை மையம் தரப்பில் எச்சரிக்கை அறிவிப்பும் வெளியிடப்பட்டது. எப்போதும் இல்லாத அளவுக்கு வெயில் அதிகமாக இருப்பதால் மதிய வேளையில் பொது இடங்களில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்து விட்டது.

இந்த வெயில் கொடுமையால் மனிதர்களின் உடலில் நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்டால், நோய் தாக்குதலுக்கு ஆளாக நேரிடும். எனவே, பொதுமக்களுக்கு நீர்ச்சத்து குறைபாடு ஏற்படுவதை தடுக்க நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் உப்பு–சர்க்கரை கரைசல் வழங்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குனர் பிரகாஷ் உத்தரவிட்டார்.

உப்பு–சர்க்கரை கரைசல்

அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் கமிஷனர் மனோகர் உத்தரவின்பேரில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் உப்பு–சர்க்கரை கரைசல் வழங்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் காமராஜர் பஸ் நிலையம், ரெயில் நிலையம், குமரன்பூங்கா, சினிமா தியேட்டர் பகுதி, வழிபாட்டு தலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் கடந்த 15–ந் தேதி முதல் உப்பு–சர்க்கரை கரைசல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், நடமாடும் வாகனங்களிலும் உப்பு–சர்க்கரை கரைசல் வழங்கப்பட்டது. இதுதவிர நகரில் குப்பை சேகரிப்பு மற்றும் சாக்கடை தூர்வாரும் பணியில் ஈடுபடும் துப்புரவு தொழிலாளர்களுக்கு பாட்டில்களில் உப்பு–சர்க்கரை கரைசல் வழங்கப்படுகிறது. இந்த பணிகளில் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் பொது சுகாதாரத்துறை ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

**தேனி மார்க்கெட்டில் பூக்கள் விலை குறைந்தது ஓரிரு நாட்களில் அதிகரிக்க வாய்ப்பு**



தேனி,

தேனி மார்க்கெட்டில் பூக்கள் விலை குறைந்து உள்ளது. அதே நேரத்தில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு இன்னும் ஓரிரு நாட்களில் பூக்களின் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

<u>பூக்கள் சாகுபடி</u>

தேனி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பூக்கள் சாகுபடி நடந்து வருகிறது. தேனி, கொடுவிலார்பட்டி, பூமலைக்குண்டு, கோட்டூர், தர்மாபுரி, தாடிச்சேரி, தப்புக்குண்டு, உப்புக்கோட்டை, பாலார்பட்டி, கூழையனூர் போன்ற பகுதிகளிலும் போடி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளிலும் பூக்கள் சாகுபடி அதிக அளவில் நடந்து வருகிறது.

இந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பூக்கள் தேனி, சீலையம்பட்டி, ஆண்டிப்பட்டி பகுதிகளில் உள்ள பூ மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன. மேலும், மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. கடந்த சில

நாட்களாக பூக்கள் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் விலை குறைந்து உள்ளது.

விலை குறைவு

தேனி பூமார்க்கெட்டில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு இருந்ததை காட்டிலும் தற்போது பூக்கள் விலை குறைந்து உள்ளது. சம்பங்கி பூ ஒரு கிலோ ரூ.150–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், நேற்று ரூ.70 முதல் ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. கோழிக்கொண்டை, செண்டு மல்லி, கனகாம்பரம் பூக்களின் விலையும் குறைந்து உள்ளது. தேனி பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ பூக்களின் நேற்றைய விலை நிலவரம் வருமாறு:–

மல்லிகை ரூ.100, கனகாம்பரம் ரூ.150, முல்லைப்பூ ரூ.200, அரளி ரூ.100, செண்டு மல்லி ரூ.40, கோழிக்கொண்டை ரூ.40, கொழுந்து ரூ.50 என விற்பனை செய்யப்பட்டது. அதேபோன்று தேனி பூ மார்க்கெட்டுக்கு நேற்று சுமார் 3 டன் பூக்கள் விற்பனைக்கு வந்தன. செண்டு மல்லிப் பூக்கள் அதிக அளவில் வந்ததால் அவை ஆண்டிப்பட்டி மற்றும் மதுரை மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மதுரை, தேனி மாவட்டங்களில் இன்னும் சில நாட்களில் சித்திரை திருவிழா தொடங்க உள்ளதால் பூக்கள் விலை ஓரிரு நாட்களில் உயர வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.